**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 332/2019 |
| Name | : Sekar (SI of Police) |
| P.W. | : 8 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.06.2024

**எதிரி 1 நீதிமன்றத்தில் ஆஜர்**

**2, 3, 4 எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு317 ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு வழக்கறிஞரிர் ஆஜரில்லை என்பதால் எதிரி மற்றும் வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன். கடந்த 11.12.2016 ம் தேதி நான் கொமரலிங்கம்

காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த கன்னிமுத்து என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.288/2016 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவ்ல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரினை இணைத்து உடுமலைப்பேட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1க்கு அனுப்பி வைத்தேன். அதன ஒரு நகலை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 12.12.2016 ம் தேதி 02.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சௌந்திரராஜன் மற்றும் காளிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அவை முறையே அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் சாட்சிகளான கன்னிமுத்து, சரஸ்வதி, மயிலாத்தாள், சண்முக சுந்தரம், சரவணக்குமார் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் 1ம் எதிரியை 12.12.2016 ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கின் 2 முதல் 4 வரையான எதிரிகள் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட கன்னிமுத்து மற்றும் சரஸ்வதிக்கு சிகிச்சை அளித்த உடுமலை அரசு மருத்துவர் திரு.செல்வராஜ் அவர்களை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்று பெற்றேன். அந்தக் காயச் சான்றுகள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மருத்துவரை விசாரணை செய்ததிலும், காயச் சான்றிதழிலும் வாதிகளுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் மேற்படி வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) ல் இருந்து இதச பிரிவுகள் 294(பி), 324, 326 506(2) ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்தேன். **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 17.02.2017 ம் தேதி இதச பிரிவுகள் 294(பி), 324, 326 506(2)ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை அதனால் குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2024.06.14 14:45:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்